# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 24**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வி வெர்ஜினியா | Husband's Name | : | ஜோதிமுத்துராமலிங்கம் |
| Village | : | எரவாஞ்சேரி | Taluk | : | குடவாசல் |
| Calling | : | | Age | : | 46 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 16th day of February 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2025 அன்று காலை 9.00 மணிக்கு பயிற்சி உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்த திரு சேகர் வடபாதிமங்கலம் மாயனூரை சேர்ந்த பிச்சை மகன் நாகையன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று வடபாதிமங்கலம் காவல் நிலைய கு.எண் 14/2025, பாநிச பிரிவுகள் 191(2), 191(3), 103 ன்படி முதல் தகவலறிக்கை பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவலறிக்கை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 16:51:03 +0530

**அ.சா.ஆ.22**. 12.02.2025 அன்று நான் கூத்தாநல்லூர் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பும் வகித்தேன். வடபாதிமங்கலம் காவல் நிலைய கு.எண் 14/2025 வழக்கு கோப்பில் 12.02.2025 அன்று சுமார் 14.00 மணியளவில் திருவாரூர்-மன்னார்குடி ரோடு மூலங்குடி பிரிவு சாலையில் எதிரிகள் அப்பு (எ) புதியபாண்டியன், சுரேந்திரன், சக்திதாஸ் ஆகியோர்களை குற்ற காரணம் கூறி கைது செய்தேன். 4 ம் எதிரி புதியபாண்டியன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் திருவேங்கடம், சசிகுமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் கொலை செய்த இடத்தை அடையாளம் காட்டியும் நான் ரோபர்டை அடிக்க பயன்படுத்திய சவுக்கு கட்டையை மாயனூர் பஸ் ஸ்டாப் அருகில் மறைத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்ற எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.23** (அ.சா.ஆ.23 யை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. AIR 2001 SC 1158 தீர்ப்புரையை பின்பற்றியும் நீதியின் நலன் கருதியும் குறியீடு செய்யப்படுகிறது). அதனடிப்படையில் 16.00 மணிக்கு சாட்சிகள் திருவேங்கடம், சசிகுமார் ஆகியோர் முன்னிலையில் எதிரி புதியபாண்டியன்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.16 16:51:12 +0530

மாயனூர் பேருந்து நிறுத்தம் அருகிலுள்ள புள் செடியில் மறைத்து வைத்திருந்த சா.பொ.4 யை அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.4 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.24**. 12.02.2025 அன்று சாட்சிகள் திருவேங்கடம், சசிகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு கோப்பு என்வசம் ஒப்படைத்தபோது வழக்கின் பெருவாரியான புலன் விசாரணை முடிவுற்ற நிலையில்தான் என்வசம் வந்தது என்றால் சரி. முதல் தகவலறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சேகரை நான் விசாரித்தேன் என்றால் சரி. வடபாதிமங்கலம் காவல் நிலையத்திலிருந்து மன்னார்குடி நீதித்துறை நடுவர் எண் 2 க்கு அதிகபட்சமாக 45 நிமிடங்களில் சென்றடைய முடியுமென்றால் சரி. சாதாரணமாக மோப்ப நாயின் உதவி கண்டுபிடிக்கபடி முடியாத அல்லது எதிரிகள் பற்றிய விபரங்கள் தெரியாத வழக்குகளுக்கு மட்டுமே பயன்படுத்துவது வழக்கம் என்றால் சரி. கண்ணுற்ற சாட்சிகளாக நபர்கள் இருக்கும் நிலையில் மேற்படி மோப்ப நாயை புலன் விசாரணைக்கு பயன்படுத்துவதில்லை என்றால் சரி. அ.சா.ஆ.22 நீதிமன்றத்திற்கு சுமார் 14 மணி நேரம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 16:51:17 +0530

காலதாமதமாக சென்றடைந்ததற்கான சிறப்பு காரணம் ஏதேனும் உண்டா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.23 ன்படி இவ்வழக்கின் புதிய சங்கதிகள் எதுவும் எனக்கு புலப்படவில்லை என்றால் சரி. மாயனூர் பேருந்து நிறுத்தம் என்பது பொதுமக்கள் அதிகம் நடமாடக்கூடிய இடமென்றாலும் திறந்தவெளி என்றாலும் சரி. குறிப்பாக எந்த இடத்தில் சான்று பொருள் வைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை எனவும் எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை எனவும் எதிரியிடமிருந்து தடய பொருள் எதுவும் கைப்பற்றவில்லை எனவும் சொன்னால் தவறு. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் எனது கைப்பட எழுதப்படவில்லை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.16 16:51:23 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.